

ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள்

நினைவாக

வெளியிடப்பெற்றது

# ஒளியும் நீயே ஓசையும் நீயே.

## திருக்கேதீஸ்வரம்

# ஸ்ரீமத் சபாரத்தின அடிகளார்



வெளியிடுபவர்

**துரைராசா**

20-03-1988

## குருவணக்கம்

முன்னைத் தவநலம் மூண்டிடு தன்மையின்
என்னை விளித்திங் கின்னல மெய்திட
நன்னர் உசாவி நாயகன் தாளிணைக்
கென்னை வழிசெய்த வென்குரு வாழிய.

– வல்லிபுரத்தான் தலபுராணம்

"Hinduisim has given us, in the
form of the sanyasin, Its
picture of the Ideal man"

''இந்துமதம் தன்லட்சிய புருஷனை ஒரு
சுத்தமான சந்நியாசியின் உருவத்தில்தான்
உணர்த்தியிருக்கிறது''

– இராதாகிருஷ்ணன்

# தவத்திரு சபாரத்தினம் அடிகளார்



தோற்றம்
18-03-1904

ஏற்றம்
25-01-1988

வானநாடரும் அறியொணாத நீ
மறையினீறுமுன் தொடரொணாத நீ
ஏனை நாடரும் தெரியொணாத நீ
என்னையின்னி தாயாண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆடுவித்தவா
உருகி நானுனைப் பருகவைத்தவா
ஞான நாடகம் ஆடுவித்தவா
நைய வையகத்துடைய விச்சையே

## சமர்ப்பணம்

நாமெல்லாம் பசுக்கள்; பசு – ஆன்மா. நம்மனசு பால்போல வெண்மையாய் அமைய வேண்டும். பாலை நன்கு காய்ச்சி உறையிட்டாற் தயிராகும். தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுக்கலாம்; வெண்ணெய் – நவநீதம் நவநீதமென்றால் புதிதாக எடுத்ததென்று அர்த்தம். பக்திக் கனலிலே வெள்ளை மனதைக் காய்ச்சினால் அது பொங்கும். அதைப் பொறுமையெனும் அகப்பையாலாற்றி, சாந்தமெனும் பிரைகுத்த வேண்டும். பால் ஆடியோடுவது போல தயிர் ஓடுவதில்லை கெட்டியான தயிர் போன்று மனதும் நிர்ச்சலனமாய் இருக்கும் நிலை தயிர்நிலை இதய மென்கின்ற பானையுளிருக்கும் தயிரிலிருந்து சத்தியத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தை மத்தாக்கி, ஒரு முகச்சிந்தனை யென்கின்ற கயிற்றினாற் கடைந்தால் பூரணத்வமென்கின்ற வெண்ணெய் வரும். வெண்ணெயைத் தண்ணீரிற் போட்டால் ஒட்டாது. இதுவே ஞானியின் நிலையும். சாதுக்களின் சித்தத்திலே உறைபவன் ஈசன். வெண்ணெயை அப்படியே சிரமமின்றி விழுங்கிவிடலாம். இவ்வண்ணம் தன்னைக் குழைத்துக் குழைத்து, திருவாசக மென்னும் வெண்ணெயைத் திரட்டித் தீற்றிய திருவாசக ஸ்வாமிகளின் பாத மலர்களில் இப் புத்தகத்தை நிவேதனம் செய்கிறோம்.

அன்பர்கள்

# ஆசியுரை

அருட்பெருந்தகையீர்.

ஈழவளத்திரு நாட்டில், பாடல் பெற்ற ஸ்தலங்களில் ஒன்றாகிய திருக்கேதீஸ்வரத்தில், முதன்முதலாகத் திருவாசக மடத்தை ஸ்தாபித்த ஸ்ரீமத் சபாரெத்தினம் சுவாமி அவர்களின் முதலாவது குருபூஜை நிகழ்வுளதறிந்து பெருமகிழ்ச்சியடைகிறோம். இலங்காபுரியில் ஒரே ஒரு திருவாசக மடமாக விளங்கும் பெருமைக்குரியது இம்மடம். சுவாமிகள் ஞானக்களஞ்சியமான திருவாசகத்தை எழுத்தெண்ணி மனனம் பண்ணினவர்கள். அவர்கள் எப்போதும் ஏதாவதொரு திருவாசகப் பாவை ஓதிய வண்ணமே இருப்பார்கள். சைவமக்கள் அனைவரும், திருவாசகத்தை நன்கு ஓதியுணர்ந்து நற்பயன் பெறவேண்டுமென்றே தமது உடல், பொருள் ஆவி, அனைத்தையும் ஈய்ந்து அயராது உழைத்தவர். ஒருவர் எதை, நினைந்து ஓயாது மனமுருகி மனனம் செய்கிறார்களோ, அதுவாகவே ஆகிவிடுவார்களென்பது ஆன்றோர்வாக்கு. அந்த வகையில் சுவாமிகளும் மரணமிலாப் பெருவாழ்வாகிய திருவாசக வாரியில் கலந்து விட்டார்கள். திருவாசக மடக்கைங்கரியங்கள் தளர்வுறுது வளர்ந்தோங்க வேண்டும். இதுவே சுவாமிகளின் திருவுள்ளக் கிடக்கை. அதற்கென சைவமக்கள் ஆவன செய்ய வேண்டியது அவர்களின் கடமை. இந்த நல்ல வேளையில் சுவாமிகளை நினைவு கூர்ந்து அவர்களின் ஜீவாத்மா பேரின்ப சாந்தி நிலை எய்த வேண்டுமெனப் பரம்பொருளைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்
18.02.1988

தொண்டின் சிகரமாய்த் திகழும்

## திருவாசக ஸ்வாமிகளுடன் பஞ்சாட்சர அம்மா



கெடுவேன் கெடுமா கெடுகின்றேன் கேடிலா தாய்வழி கொண்டாய்
படுவேன் படுவதெல்லாம் நான் பட்டாற் பின்னைப் பயனென்னே
கொடுமா நரகத்தழுந்தாமே காத்தாட் கொள்ளுங் குருமணியே
நடுவாய் நில்லா தொழிந்தக்கால் நன்றே எங்கள் நாயகமே.

— ஆனந்தமாலை

ஸ்ரீராம ஜெயம்

# சபாரத்தின அடிகள் வாழி!

தித்திக்கத் தித்திக்க
　திருவா சகத்தேனை
எத்திக்கும் இனித்திடவே
　எடுத்தியம்பி இறைபதத்தில்
முத்திக்கு முத்திதர
　முழுமுதலான் தளிர்ப்பாதம்
பத்தியுடன் சேர்ந்த சபா
　ரத்தின அடிகள் வாழி! 1

திரிசக்தி அருள்பொலிய
　திகழ்வாணி கலைமகளும்
அரிசக்தி இலக்குமியும்
　அரசக்தி பார்வதியும்
ஒருமித்தே அருள்பொழியும்
　ஒருவனெனில் சபாரத்ன
திருமிக்க அருட்கடலாம்
　திருவடி யானும் வாழி! 2

உருகாத மனத்தனையும் நெக்குருக்கி
　உளமார சிவபிரானின் பதமே சேர்க்கும்
பெருவாசகத் தேனைப் பொழிந்து மாந்தர்
　பேரின்ப வாரிதியில் ஒன்று சேரத்
தருமாசபாரத்ன செம்மல் சேவை
　தாரணியில் மாந்தரது நெஞ்சில் என்றும்
திருவாசகம் போலதித்தித்தன்பாய்
　திகழ்ந்திடுமே சபாரத்னம் வாழி வாழி! 3

"கவிமாமணி"

# அண்ணல் திருவடிகளே தஞ்சம்

சீரோங்கு தெய்வத்திரு வாசகத்திறைசை
திசையெங்கு மொலிக்கும் வண்ணம்
பாரோங்கு பாலாவிக் கரையோரம்
பசுமைபொலி ஆலமர மொன்றின்கீழே
தேரோங்கு வீதிவழித் தென்பாங்கர்
தெவிட்டாத வாசகத்தை விரித்துரைக்கும்
நீரோங்கு உள்ளமுடை ஞானகுரு
நீண்டதொரு குடிசைதனில் நிற்பாரென்றும் 1

நல்லதொரு வாழ்விற்கும் சாவிற்கும்
நமக்குவழி காட்டுமொரு வாசகத்தை
எல்லவரும் இடையறு தோதிவந்தால்
எம்பெருமான் திருவடிக்கே செல்வோமென்றே
வல்லவராம் சபாரத்ன விரதிசொல்வார்
வருபவரை ஆதரித்தே வகைவகையாய்
நல்லவொரு போசனமும் சமைத்தேநல்கி
நாளெல்லாம் வாசகத்தை உணர்த்துவாரே. 2

உணர்ந்தவரும் உணராத உள்ளத்தாரும்
உத்தமநல் வாசகத்தின் பொருளறிந்தே
இணரூழ்த்து நாறுகின்ற மலரென்ன
இதயமெலாம் மணங்கமழ்ந்தே இருப்பரங்கு
கணந்தோறும் வாசகத்தைக் கற்றேநல்ல
கருத்துணர்ந்து கண்ணீர் சோர்வர்
குணந்தானும் குற்றந்தானும் பாராதென்றும்
குழைத்தசொன் மாலைதன்னில் குழைந்தே போவர். 3

தந்தையிலும் மேலான தயைவுகாட்டி
தாயிலுமே சிறந்தவொரு அன்புகூர்ந்து
சிந்தையிலும் செய்கையிலும் சிறந்தே வாழும்
சிறப்புடைய சுவாமிகளின் சொல்வணத்தால்
எந்தைபிரான் திருவடியை எண்ணிநாளும்
எழிலான வாழ்வுடனே இருப்பரன்றே
விந்தைமிகு சுவாமிகளின் வாக்குக்காக
வித்தகர்கள் பலரங்கே கூடிநிற்பர். 4

பொன்போலும் மேனிநிறை நீற்றுடனே
பொருந்தியநற் கண்டிகையும் தாங்கியந்தோ
என்போலும் மதியிலிகள் தம்மைக்காத்தே
என்றென்றும் வாசகத்தை ஓதச் செய்த
அன்பாலும் சுவாமிகளின் அருளைவேண்டி
அகமெலாம் குழைந்துருகி நிற்பேனென்றும்
தென்பாலே உகந்தாடும் சிற்றம்பலவன்
திருவடியே சரணம் என்றும் 5

துறவுநிலை கொண்டவர்க்கு முயர்ந்ததொரு
துறவியாவார் துறவுநிலை காணுர்க்கும்
உறவுநிலை கொண்டவராம் உத்தமனுர்
உகந்ததொரு சுற்றமுமாய் ஒளிர்ந்திடுவார்
நிறைவுபல காண்பதற்கா யவரடியை
நித்தமுமே நாடுகின்ற அடியார்கூட்டம்
நறவுநிறை வாசகத்திற் தோய்ந்தே
நற்றவராய் நடந்துதம் வாழ்வுகாண்பார். 6

தெருளார்ந்த வாழ்வு கொண்டே
தெருவெல்லா மலைகின்ற திறத்தைவிட்டே
பொருளார்ந்த வாசகத்தை உணர்ந்தாராகில்
பொறுப்பான மனிதவாழ்வைப் போற்றிடுவர்
அருளார்ந்த ஆனந்த நெறியேகாட்டும்
அருமையுறு திருவாசகத் தேனைக்கேட்டு
இருளார்ந்த நெஞ்சில் யார்க்கும்
இருள்நீக்கி ஒளிகாண வைப்பார்சுவாமி. 7

கீர்த்திமிகு கேதீஸ்வரத் தண்ணல்பாதம்
கிழமையொடும் காலையிலே வேண்டிப்பின்னர்
சீர்த்திமிகு திருவாசகந் தன்னையோதி
சிறப்புடனே வருவோர்க்கு மெடுத்துச் சொல்லி
நேர்த்திமிகு அறுசுவையோ டன்னமாக்கி
நேயமிகு அடியார்க்கு மளித்துமீதம்
பூர்த்திமிகு உள்ளமுடன் புசித்தே என்றும்
புண்ணியனுர் திருவடிக்கே குழைவாரன்றே. 8

அன்னவரின் திருவடியைச் சிரமேற்கொண்டு
அநுதினமும் வாழ்ந்திடுவோம் நாங்களென்று
முன்னவரின் திருவடிக்கே எமையுய்க்கும்
மூர்த்தியவன் முளரிப் பாதமென்று
பின்னவரின் பிறப்பறுக்கும் பெருவழியில்
பெட்புடனே நடந்தேநற் பேறுபெற
தென்னவனும் திருவாதவூரர் தந்தவொரு
திருவாசகம் மேற்கொண்டே சிறக்கலாமே 9

என்றவொரு இலட்சியத்தை இறுதிவரை
எந்நாளும் காத்துவரும் குருநாதர்
பொன்திகழு நடராஜன் திருவடியை
பொழுதெலா மேத்திநிதம் வாதவூரர்
தன்திரு வாயாற்பாடி வைத்தவந்த
தன்நிகரில் வாசகத்தை ஓதி ஓதி
அன்பரொடு அனுதினமும் மகிழுமந்த
அண்ணல் திருவாசக சுவாமி திருவடிவாழ்க. 10

- சிங்கையாழியான்

# ஊனினை உருக்கி
# உள்ளொளி பெருக்கிய சுவாமிகள்

தித்திக்கும் திருவாசகத்தில் தோய்ந்து தெளிவு பெற்றவர் எங்கள் சபாரத்தினம் சுவாமிகள். அவருடைய திருவுடம்பு திருவாசகத்துக்கு உருகிய ஒளி உடம்பு. நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் திருவாசகத்தை ஓதி ஓதி உள்ளொளி பெற்றவர். இத்துணை அருள் நலம் வாய்க்கப் பெற்ற அனுபூதிமான்கள் ஒரு சிலராவது வாழ்வதால்தான் உலகம் நிலைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது சான்றோர்களின் கருத்து.

திருக்கேதீஸ்வரம் ஈழத்தில் பாடல் பெற்ற திருத்தலம் என்ற பெருமைக்குரியது. இங்கு அமைக்கப்பட்டிருக்கும் திருமடங்களை அருள் மடங்களாக மாற்றிய பெருமை சபாரத்தினம் சுவாமிகளுக்கு உண்டு. ஒருமுறை அவர் முன்னிலையில் சென்று அடங்கி ஒடுங்கி நின்றேன். இருக்கப்பணித்து ஒரு திருவாசகத்தை ஓதவும் பணித்தார். அவர்களே முதலடியையும் கூறித் தொடக்கி வைத்தார்.

"நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீயேயாட்கொண்டாய்
மாயப்பிறவி உன்வசமே வைத்திட்டிருக்கும் அதுவன்றி
ஆயக்கடவேன் நானோதான் என்னதோ இங்கதிகாரம்
காயத்திடு வாய் நின்னுடைய கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே"

என்ற பாடலைப் பாடியவுடனே அதன் பொருளை மிகத்தெளிவாக ஞான உபதேசம் போன்று எனக்கு உணர்த்தியருளினார். ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு திருக்கேதீஸ்வரம் திருவாசக மடமுன்றிலில் நடைபெற்ற சம்பவம் இதுவாகும். இதனைத்தொடர்ந்து ஆண்டு தோறும் திருவாசக விழாவுக்குச் செல்லும் போது சுவாமிகளின் அருளுரைகளைச் செவிமடுக்க வாய்ப்புக் கிடைத்தது. ஆத்ம தாகமுள்ள எத்தனையோ அன்பர்கள் சுவாமிகளின் அருள்வாக்கினால் அமைதியும் ஆனந்தமும் அடைந்துள்ளனர். நான் யார்? என்னுள்ளமார்? ஞானங்களார்? என்னையாரறிவார்? என்ற திருவாசக வாக்குகள் சுவாமிகளுக்கு மேலும் மேலும் தித்திப்பை யூட்டியது. பழுத்த மனம்; பெரும் பக்தி; ஞானநடை; வாக்குறுதி அனைத்தையும் இவர்களிடம் காணக்கிடைத்தது எமது பாக்கியமாகும். சுவாமிகளின் சமாதி திருக்கேதீஸ்வரத்தில் அமைய இருப்பது எமக்கெல்லாம் ஒரு நினைவாலயமாக விளங்க வழி காட்டுகிறது. இம்முயற்சியில் ஈடுபடும் அன்பர்கள் பெரும் பாக்கியசாலிகள் அன்றோ! அடியேனும் திருவாசகச் சுவாமிகளின் திருவடிகளை வழுத்தி அமைகின்றேன்.

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி** ஜே. பி.
தலைவி, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

# கிடைக்குமோ குருவின் பாதம்

முப்பத்தெட்டு ஆண்டுகள் எம்மோடு தொடர்புடையவர் சபாரத்தினம் ஸ்வாமிகள். இவரை 1950 இல் முதன்முறை சந்தித்தோம். காந்தி, சிந்தாமணி, நகுலர், பாட்டியம்மா புடைசூழக்கண்ட நாம் அவரை அப்பு என்றே அழைப்போம். எனவே பலரும் பலகோணங்களிலும் அவரைக்கண்டு எப்படியழைத்தாலும், நாமவரை இக்கட்டுரையில் அப்பு என்ற திருநாமத்திற்றன் காண்கிறோம். அடியார் நடுவுள் இருக்குமவர் பெருமை, அனுபவித்தவர்களுக்கே தெரியும்.

அடிக்கடி அப்புவின் வருகையால் எம் இல்லம் சிறக்கும், உள்ளம் மகிழும். நீண்ட நாட்களாய் அப்புவின் காட்சி கிட்டவில்லையே என்ற ஆதங்கம், அங்கலாய்ப்பு மனதில். அன்று கருக்கலில் எழுந்து, கடமைகளை ஒவ்வொன்றாய் மேற்கொண்டு, முற்றம் பெருக்கிக் கொண்டிருந்தவேளை அப்புவின் எண்ணம் வரவே;

"கிட்டுமோ ஞானயோகம் கிடைக்குமோ குருவின்பாதம்
கட்டுமோ மூலவாசி காணுமோ கயிலைவீடு
எட்டுமோ நாகலிங்கம் ஏற்றுமோ தீபசோதி
தட்டுமோ பளிங்குமேடை தனையறிவார்க்குநெஞ்சே"

(நெஞ்சறிவிளக்கம்)

என்று பாடிக் கொண்டிருந்தேன். அப்புவின் காட்சி இன்று கிடைத்தால் என்ற நப்பாசை; என்ன அதிசயம் நினைத்தேன் வந்தார். கையிலே கம்புடன், அம்மா! என்ற ஓசை கேட்டுத்திரும்பினேன் காட்சிகொடுத்தார் அப்பு. அவருடைய திருப்பாதங்களில் வீழ்ந்து வணங்கி, சம்பவத்தை எடுத்துச் சொன்னேன். அவ்வளவுதான் பாடலை விளக்கினார்கள். தன்னையறிந்தின்பமுற வெண்ணிலாவே ஒரு தந்திரம் நீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே என்பது ஆன்றோர் வாக்கு. தன்னையறிந்தவன் தலைவனுவான். அவனுக்குக்கிட்டும் ஞானயோகம் எந்தநிலையிலும் தான் அறவேண்டும். அப்போ குருவின் பாதம் கிட்டும், மூலவாசி கட்டுவான், கைலையும் காண்பான் நாகலிங்கம் எட்டும், ஜோதியொளி உள்நின்றெளிரும். பளிங்குமேடையில் நிற்பானவன். குருவின்பாதம் இலகுவிற்கிட்டுவதன்று. திருப்பெருந்துறையில் உருவக்குருவாய்நின்ற இறைவன், கழுக்குன்றிலே அருவக்குருவானுன். திருவாதவூரருக்கு உய்யக் கொண்ட இடம் பெருந்துறையானலும், காணுததகாட்சி கொடுத்த இடம் கழுக்குன்றம். குருவாக ஆண்டவன் வருவான். மானிடர்க்கு மானிடனய்த்தான் வருவான். இவன்தான் குருவென்று சொல்ல முடியாத வகையில்தான் காட்சியளிப்பான். குருவாய் வருவாய் அருள்வாய்குகனே," இது அனுபூதி வாக்கு. குருவில்லாத வித்தைபாழ். குருபத்தியோகம் மிக முக்கி

யமானது. குருதரிசனம் திருக்கழுக்குன்றப்பதிகம். மேனிதீண்டல், வார்த்தை கேட்டல், குருவைக் காணல், நினைத்தல், அவன்புகழ்பேசுதல், அவன்வழிநடத்தல், தொண்டு செய்தல், மேலாகக் குருபரம்பரையைப் பேணல். ஆத்மீகத்தின் ஊன்றுகோலாகும். இவ்வாறு எமக்கு நெஞ்சறிவுறுத்திய ஞானி. உடலம் விட்டு எமது குருதேவரான பெருமையை எப்படி எழுதுவது, பேசுவது. இவ்வண்ணம் எத்தனை யெத்தனையோ சம்பவங்கள் எம்நெஞ்சில் படமாயோடுகின்றன. இந்தச் சிறியகைகொண்டு அந்தப் பென்னம் பெரிய விஷயங்களை எப்படி எழுத்தில் வடிப்பது நெஞ்சம் நிறைந்த ஞானி மகாசமாதியெய்தினும் அவருடைய அடிச்சுவடே எமது திருவடிப் பூசை ஆகும்.

*14. 2. 76* இல் நடந்தது

**– பக்திமதி**



## "திருப்பெருந்துறையுறை சிவபெருமானே"

"எது தம்பி திருக்கேதீஸ்வரம் உள்ளத்துள் இருப்பவனே உள்ளத்துள்ளேயே பார். அது வல்லவோ திருக்கேதீஸ்வரம் .. இந்த உடல் நல்லாகக் கெட்டுப்போச்சுது. நிமிரக் கூட முடியவில்லை. இந்த ஆத்மா ஏன் இந்த உடலுக்குள் இருந்து அவஸ்தைப் படுகுது. ஏன் இந்த உடலை விட்டுப் போகுதில்லை. ஆனால் போகுங்காலம் வந்துவிட்டதுவே" ... இது சுவாமிகள் சமாதி அடைந்த தினமான 25.01.1988 காலையில் என்னுடன் நடாத்திய சம்பாஷணை. அத்துடன் "பாசம் பரம்சோதிக் கென்பாய், இராப்பகல் நாம் பேசும்போதெப்போ" என்ற பாடலை நான் பாட அதற்கு விளக்குமளித்தார்.

சுவாமிகளின் முற்றுமுழுதான மூச்சு திருவாசகமே. ஆத்மா உடலை விட்டுப் பிரியும் வரையிலும், திருவாசகத்தைப்படித்து, கற்பித்து வந்த ஆசான் மறைந்தும், மறையாத ஜோதியாக அடியவர்களின் மனத்தில் ஒளிர்ந்து கொண்டுள்ளார்.

அடியவர்கள் கூட்டம் ஒன்றுசேர வேண்டும். இதுவே சுவாமிகளின் உள்ளார்ந்த விருப்பமாகும். இதற்காக அவர் ஆற்றிய சேவை அளப்பரியது. இராமகிருஷ்ணாலயத்தில் வாழ்ந்த காலத்தில் அடியவர்களுக்குத் திருவாசகக் கருத்துக்களை அள்ளி அள்ளி வீசினார். அவரின் கருத்துக்கள் மிகவும் உள்ளார்ந்தமானவை.

உதாரணமாக:-

"மையலாயிந்த மண்ணிடை வாழ்வெனு மாழியு ளகப்பட்டுத்
தையலாரெனும் சுழித்தலைப்பட்டு நான்றலை தடுமாறுமே" ......

என்ற அற்புதப் பத்துப் பதிகத்துக்கு சுவாமிகள் கூறும் விளக்கமும் அற்புதமானது. தையலார் என்பது பெண்களைக் குறிக்கவில்லை என்றும் அவை ஐம்புலன்களையே குறித்து நிற்கின்றன என்றும் கூறி, இந்த ஐம்புலன்களும் தைக்கக் கூடியவை. அதாவது 'சிந்தை புலன் வழி ஓடி ஆசையை ஏற்படுத்துகின்றது. எனவே பிறவி அறுக்க "ஆசையறுக்க வேண்டும் ஈசனோடாயினும் ஆசையறுத்தல் வேண்டும்" என்று விளக்கமளித்தார்.

இந்த உடலை இயக்கும் பெரும் துறையாக இருதயம் விளக்குகின்றது. இருதயத்தில் இறைவன் ஆத்மஜோதியாக உறைகின்றான். என்று "திருப்பெருந்துறைஉறை சிவபெருமானே" என்ற வரிக்கு விளக்க மளித்தார். புறத்திலே திருப்பெருந்துறையை நாடி ஓடாதே உனக்குள்ளே உள்ள பெருந்துறையை எட்டிப்பார். அங்கே திரு உள்ளது என்று சுவாமிகள் கூறுவார்.

'மடத்தைக் கட்டி மடவேலை செய்யப் போமுயோ'' என்று இறைவன் விசரன் வடிவில் கேட்டு, கன்னத்தில் அறைந்த மாத்திரத்தில் யாழ்ப்பாணத்தில் சுவாமிகள் நடமாடத் தொடங்கினர் இதனால் திருவாசகம் யாழ்ப்பாணத்தில் மிளிரத் தொடங்கிற்று. யாழ்ப்பாணத்தில் அவர் திருவடி படாத இடங்களே இல்லை என்லாம்.

சுவாமி மிகவும் சுறுசுறுப்பாக இயங்கினர்.

அடியவர்கள் கூட்டம் மிளிர ஆவன செய்துவிட்ட திருப்தியுடன் அந்த ஆத்மஜோதி இறைவனுடன் கலந்து விட்டது.

வாழ்க சுவாமிகள் நாமம்

ஜெய் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகளுக்கு ஜெய்

**இராச மகேந்திரசிங்கம்**
நிர்வாகி, இராமகிருஷ்ணலயம்
திருநெல்வேலி.

# அப்புவாக

மனிதன் உலகிற் பிறந்து அறிவு வளரும்போது எதைத் தேடிப் போக வேண்டுமோ அதைத்தேடிப்போன ஜீவன்களில் எங்கள் (அப்புவும்) பெரியாரும் ஒருவர். அவர்களுடன் எமது தொடர்பு சுமார் முப்பத்தைந்து வருடகால அளவில் இருக்கும் அவர்கள் தமது அடியார்களுடன் முக்கியமாக சிந்தாமணி, நகுலர், பாட்டி அம்மா, முதலியவர்களுடன் எமது வீட்டிற்கு அருகாமையிலுள்ள அன்பும் அறிவும், கொடையும், விருந்தோம்பும் பண்பும் நிறைந்த பக்தித்தாய் ஆகிய சோதிஅக்கா அவர்கட்கு வருடத்தில் நான்கு ஐந்துமுறை தரிசனம் கொடுப்பார்கள். நானும் அதில் கலந்து கொள்ளும் பாக்கியம் பெற்றுள்ளேன். அக்காலத்தில் அப்பு அவர்களின் தோற்றம் தூய வெள்ளை வேட்டி சால்வை, நீளக்கையுள்ள (நாஷனல்) சட்டை, கையில்குடை, நிமிர்ந்தநடை, சிரித்தமுகம், உள்ளத்தை உருக்கும் பார்வை, உண்மை எங்கே என்ற சிந்தனையுடன் வருவதை நாம் காண்போம். அக்காலத்தில் நான் இளைஞனாகை இருந்தபடியால் அவர்களிடம் பலவிதமான குறுக்கு, முரட்டுக் கேள்விகளைக் கேட்கும் போது அவர்கள் மனம் கோணுமல் எமது அறிவுக்கேற்ற புதுமையான கருத்துகளைப் புரிய வைப்பார்கள். தொடர்ந்து இற்றை வரைக்கும் எங்கள் பந்தங்களாக குருவாக, தந்தையாக, தெய்வமாக, இரத்த உரித்தாக வாழ்ந்துள்ளார்.

அவர்களிடம் எமது சில சிந்தனைக்குறிகள். இந்த உலகில் தோன்றியது இருளா, ஒளியா; கடைசியில் மிஞ்சுவது எது? ஒளிதான் பதில். அப்பு. ஒளியை அருவமாகவும் ஒளியை உருவமாகவும், இறைவனை எண்ணுவது சரியா? ஆமாம். அப்பு, இறைவனை முறை (இனம்) சொல்லி வணங்கலாமா? ஆம். உங்களுக்கு என்னமுறை? நான் தாயாக வணங்குகிறேன். நீ எப்படி வணங்குகிறாய் என்றார். நான் நண்பனாக என்றேன். அப்போ அவர்கள் சொன்னார்கள் ஒவ்வொருவருக்கும் இறைவன் ஒருமுறையுடன் தான் இருக்கிறான். அவர்கள் அதைப் புரிந்து கொள்ள வேண்டுமென்று, மேலும் சொன்னார்கள் உனக்கும் இறைவனுக்கும் உள்ள இடைவெளித் தூரம் எவ்வளவு என்பது உனக்குத்தான் தெரியுமாதலின் வேறு யாரிடமும் நீ கேட்காதே என்று. வேறும் ஒரு உயர்ந்த கருத்தையும் சொன்னார்கள். நான் இந்தப்பிறவியில் இறக்கமாட்டேன் நம்பிக்கையாக, ஆகையால் "நீங்கள் எமக்குச் சமாதி கட்டவேண்டாம்" என்றார்கள், இவருடைய கருத்துக்கள் ஏனையோருடைய கருத்துக்கு மாறுபாடாக இருப்பதுபோல், இரத்தின சபாமண்டபத்தில் இவர் இருந்து அடியார்கட்கு அறிவுரை வழங்குவது ஒரு அழகான காட்சி.

ஒருமுறை கேதீஸ்வரமடத்தில் இருக்கும் போது நாம் இருவர் பகல் ஒருமணியளவில் சென்றேம். எமக்கு நல்லபசி என அறிந்து அரிசியை அடுப்பிற் கொதிக்கவைத்துவிட்டு, காட்டுப்பக்கம்போய் ஏதோ இலையைக் கொண்டுவந்து சம்பல் செய்து எமக்குப் பரிமாறும் போது எப்படியடாமோனே சம்பல் என்ருர்கள். எம்முடன் இருந்த வர் மிகவும் ருசி என்ருர். ஆனல் நானே படு கைச்சல் என்றேன். உடனே அவர்களின் முகத்தில் ஒரு தெளிவு மிளிர்வதைக் கண்டேன். சொன்ஞர் இந்த இலை யோகிகள் இந்திரியத்தைக் கட்டுப்படுத்தப் பாவிக்கும் இலை மிகவும் கைக்கும். ஆனலும் உடம்புக்கு நல்லது. **உள்ளதை உள்ளபடி சொல்பவனல் உள்ளதை உள்ளபடி அறியலாம்** என்ற உயர்ந்த தத்துவத்தை உணர வைத்துள்ளார். வாழ்க்கையில் தான்பட்ட வேதனைகளையும் துன்பங்களையும், மாணிக்கனின் திரு வாசகம் தான் **உணர்த்தியதாயும், உயர்த்தியதாயும்** சொன்ஞர். அவர்கள் வாசகத்திற்கு கருத்துச் சொல்லும் போது தன்னை மறந்த நிலையில் இருப்பதையும், புதிய கோணங்களில் புரிய வைப்பதும் ஆண்டவன் அவர்கட்கு கொடுத்த கொடையே. திருவாசகத்திற்கு எல்லோரும் **கருத்துச் சொன்ஞர்கள், இவர்கள் கருதிச் சொன்ஞர்கள்**. இவர்கள் இலைமறைகாயாக இருந்தாலும் பழத்தின் வாசனையால் இவர்களிடம் சென்ற தொண்டர்கள் எல்லாம் இராணித்தேனீக் களாயினர். இவர்கள் ஆலமரத்தின்கீழ் இருந்து, தானும் ஒரு ஆல விருட்ஷமாகிப்பல விழுதுகளை விட்டுச் சென்றுள்ளார்கள். அவர்களின் விருப்பம் ஒரு **திருவாசக அடியார்கள் கூட்டத்தை நிறுவவேண்டுமென் பதே**. அதை நிறைவேற்றப் பாடுபடுவதே நாம் அவர்களுக்கு செய் யும் நினைவும் நிறைவுமாகும்.

* அப்பு உடலம்விட்ட செய்தியை அறிந்து அவ்விடம் நோக்கி விரைந்த போது நல்லூர் வீதியில் மகாதேவ சுவாமிகளைக் கண்டு சம்பவத்தைச் சொன்னேன். அவர் சொன்ஞர் "சபாரத்தினம் சாக வில்லை. செத்தால் நான் வருவேனென்று" அது அப்புவின் வாக்கை ஆமோதிப்பதாயமையக்கண்டு உள்ளமும் உடலும் புழகாங்கிதமடைந் தது. மகான்கள் என்றும் மகான்களே.

**ஒரு விழுது**
(ச. வடிவேலு)

# எங்கள் சுவாமிகள்

தேவாரம் பாடப்பெற்ற திருக்கேதீஸ்வரத்தின் புனர் நிர்மாணப் பணியில் சேர். கந்தையா வைத்தியநாதன் முதலானேருடன் சேர்ந்து பணிபுரிந்ததோடு, அங்கே திருவாசக மடம் அமைக்கவும் பெரும்பங்கு எடுத்த ஆரம்ப முன்னேடி எங்கள் சபாரத்தினம் சுவாமிகளாவர். இவர் திருவாசகம் முழுவதையும் ஒரே மூச்சில் படித்து உருகுவதோடு, எவருக்கும் துன்பம் துடைப்பதற்குத் தகுந்த திருவாசகப் பாடலைப் பாடி உருகிவிளக்கி அமைதிகாணச் செய்பவர். சுவாமிகள் திருக்கோயில்களில் அடியார்கள் தம்மைக்காணும் வகையில் காட்சிக்கு எளியராய் இருந்து வழிபாட்டு முறைகளைப் பழக்கியுள்ளார். எங்கள் சமய வளர்ச்சியில் சுவாமிகள் பெருமளவில் பங்கு பற்றியதோடு தம்மடியார்கள் பலரை நல்ல வழியில் பணியாற்றப் பழக்கியுள்ளார். தர்மப்பணி இன்னும் செய்தாக வேண்டும். இன்ன வேளையில் இன்னபணி செய்தல் வேண்டும் என்று எமக்கு அடிக்கடி உபதேசித்து உள்ளத்தை உறுதிபெறச் செய்தமை எமக்குப் பெருமளவில் வரப்பிரசாதமாய் வந்து கிடைத்த பேறு. சுவாமிகளை நாம் மறக்க மாட்டோம். அவர் பணியை இயன்றளவு தொடர்ந்து செய்வோம்.

**க. கனகராசா ஜே. பி.**
சிவதர்மவள்ளல், மில்க்வைற் தொழிலதிபர்

# பிட்டு - ப் - பார்

நான் சின்னவனுய் இருந்த காலம், அப்பாவுடன் அப்புவைப் பார்க்கத் திருக்கேதீஸ்வரம் சென்றிருந்தேன் (13-1-76) யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு காலை 8.45 அளவில் மாதோட்டம் சேர்ந்து அப்புவின் குடிசையை அடைந்தோம். வா பிள்ளை வா நீயும் வந்து விட்டியா கேடிலாத கேதீஸ்வரத்தைத் தரிசிக்க என்று வரவேற்ருர். போனதுதான் துவங்கிவிட்டார் திருவாசகம் புத்தகத்தைப் பிரித்தார் 'மின்னேரனைய பூங்கழல்கள்' என்னும் பாடலை எனக்குச் சொல்லித் தந்து மீண்டும் மீண்டும் வாய்மொழியாகச் சொல்லி. திருவாசகத்தைத் தந்து அதிலும் படிக்கச் செய்தார். முதலில் தேத்தண்ணீர் தந்தார் பின்பு காலை உணவும் கொடுத்தார். அம்மா மன்னர் ஆஸ்பத்திரியில் இருக்கிரு. சாப்பாடு வேளைக்குக் கொடுத்துவிட வேண்டுமென அவசரமாய்ச் சமைத்து மத்தியானம் - இரவு இரண்டு நேரத்துக்குமாக ஒருவரிடம் உணவைக் கொடுத்துவிட்டார். எங்களையெல்லாம் பாலாவியிற் குளித்து எம்பெருமானை வணங்கி வரும்படி சொன்னர். அப்புவின் கட்டளைப்படி நீராடிக் கோயில் சென்று கும்பிட்டு விட்டு குடிசைக்குப் போனேம். மத்தியான உணவு தந்தார். பின்பு தானும் குளித்துச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு வெற்றிலை போட்டார். மூன்புறம் வந்து பழையபடி திருவாசகம்தான். சுமார் நாலு மணிவரும், போய்க் குருவித்தலைப் பாவற்காய் தேடிவரும்படி சொன்னர். நடராசா என்ற அடியாரும் நானும் அப்பாவும் போய் நிறையக் கொண்டுவந்தோம். வந்த உடன் உனக்கு இரவைக்கு என்னடா வேணும் என்று கேட்டார். நான் பிட்டு வேணுமென்றேன். சரி, பிட்டு அவிக்க நீத்துப்பெட்டி இல்லையே, என்ன செய்ய என்று இழுத்தார். நான் இழைப்பேன் என்றேன். எடபிள்ளை ஓலை இல்லையே என்று சொல்லிக்கொண்டு உள்ளேபோய் ஒரு அருச்சனைப் பெட்டியுடன் வந்தார். அதைக் குலைத்து, கணக்காகக் கிழித்து என்னிடம் கொடுத்தார். நான் இழைத்துக்கொண்டிருந்தேன். மீண்டும் திருவாசகத் தொடர்ச்சி நடந்தது. நீத்துப் பெட்டியும் இழைத்து முடிந்தது. சரி கைகால் முகங் கழுவிக்கொண்டு பூசையாகப் போகிறது போங்கோ என்ருர். நாமும் அன்புக் கட்டளைக்கும் பணிந்தோம். ஆலய தரிசனம் முடித்து அர்த்தசாமப் பூசையும் கண்டு திரும்பினேம். இன்னும் இரண்டொருத்தர் புதிதாக வந்திருந்தார்கள். திருவாசக அலை ஓயவில்லை. இரவு ஒன்பது மணியானதுகூடத் தெரியவில்லை சாப்பிடுவோம் என்ருர். எல்லாருக்கும் இலை போட்டு உணவு பரிமாறும்போது "பிட்டு நேர்பட" என்னும் திருவாசகத்தைப் பாடிப்பாடி அகப்பொருளும் சொன்னர். எனக்கு என்னவோ புரியவில்லை என்றேன். உன்னுடைய நெஞ்சைப் பிட்டுப்பார் தெரியும் என்ருர். பிட்டு என்ற சொல்லை வைத்தே எமக்கெல்லாம் ஒரு நுண்ணிய

கருத்தைச் சொன்னூரே அப்பு. இன்றுமென் காதிலது பேசிக்கொண் டிருக்கிறது. ஆமாம் ஒவ்வொருவரும் நம் நெஞ்சத்தை உள்ளத்தைப் பிட்டுப்பார்த்தாற் போதும் நாமும் அப்புவின் நிலையை எட்டி விடு வோம். இது நடந்து சரியாக 12 வருடங்களின் பின்னர் அப்பு மறைந்துவிட்டார். நான் அவர்களைக் கண்டு மூன்றரை வருடங்களா யிற்று அவர் சொன்ன 'பிட்டுப்பார்' என்ற மகா மந்திரம் என்னை விட்டு மறையவில்லை. பழவடியார்களே! அப்புவென நான்குறிப்பிட் டது சாபாரத்தினம் சுவாமிகளையே. இந்த அனுபவத்தை எனக்குத் தந்த ஞானத்தந்தையிடமிருந்து உத்தரவு பெற்று வீடு திரும்பும் வேளை விபூதி தந்தார்கள். அப்போதுமோர் கருத்து வந்தது, உள் ளங்கையிலே திருநீறு வேண்டுகிறுய் ஏன் தெரியுமா? உன் உள்ளம் நீருகட்டும் என்றூர். பெரியோர்களே! எமது உள்ளத்தைப் பிட்டுப் பார்ப்போம். நீருக்குவோம். இந்தப் பசுமையான நினைவு பல்லாயி ரம் மைல் தூரம் தாண்டி இந்த நாட்டில் இருக்கும் போதும் என்னை அப்புவிடமிருந்து பிரிக்கவே இல்லை. பிறிவறியா அன்பராய்வாழ்வோம்; அவருடைய பூங்கழல்களுக்கு வணக்கம்.

ப. இரவிச்சந்திரா
Badames
West Germany

# இவர் அவரேதான்

குருவே சிவமென்று கூறினன் நந்தி என்று திருமூலர் அருளிச் செய்த வகையில் குருவே பிரமா, குருவே விஷ்ணு, குருவே மகேஸ் வரன் எனக்கூறும் வடமொழிச் சுலோகமும் வழக்கில் வருகிறது.

கண்ணுக்குப் புலப்படாது, அருவமாயுள்ள இறைவனை அறிவ தற்கு அடையாளமாக அருவுருவத்திரு மேனியாய சிவலிங்கம் அமைந்தாற்போல, சிவனடியாரும் சிவனேதான் என்பது சித்தாந்தம்.

இறைவனே குவலயம் உய்யக் குருவடிவந்தாங்கி எழுந்தருளி வருகிறார் என்பது பேருண்மையாகும். தென்னவன் பிரமராயன் எனப்பெருமந்திரியாராயிருந்த திருவாதவூரரைத் தடுத்தாட்கொள் ளக் குருந்தமரத்தடியில் எழுந்தருளியிருந்த குருமூர்த்தமே தில்லையில் எல்லையில்லாப் பெருங்கருணைக் கடவுளாய் எழுந்தருளியிருந்த சிவ பெருமான் எனக்கண்ட திருவாதவூரடிகள் அவரே இவர், இவரே அவர் எனப் பாடியருளியுள்ளார். சாதாரண ஆன்ம வர்க்கத்தினராய சகலருக்குச் சிவபெருமான் அருள் செய்வது குருவடிவிலேதான் என் பர். சிவபெருமான் எம்மை எடுத்துச் சுமந்து ஈடேற்றுவதற்கு எழுந்தருளும் குருவடிவம், எங்கள் பிழைகளை எல்லாம் தாம் ஏற்று எம்மைப் பரிசுத்தராக்குபவர்.

சூரியன் முன்வைத்த பஞ்சு எவ்வித மாற்றமும் இன்றிக் கிடப்ப, சூரிய ஒளிபட்ட முப்பட்டைக் கண்ணாடி முன்னிட்ட பஞ்சு தீப்பிடித்து எரிந்தாற்போல, சிவனருள் நேரில் எமக்குப் புலப்படா திருப்ப, சிவனருள் பெற்ற குருவருள் நம்மைப் புனிதராக்குகிறது.

குரு என்பவர் நம் கண்காண எமக்கு முன்னாக எழுந்தருளி வருபவராவர். கண்ணுக்கெட்டாத நாட்டில் குகைகளிலும் மரங்களி னடியிலும் குரு இருக்கிறார் என்று நாம் கொள்வதாகில் எங்குமுள்ள இறைவனையே எண்ணியிருக்கலாம். ஆனால் எமது குரு எம் கண்கா ணப் புவனியில் சேவடி தீண்டி எழுந்தருளி எமக்கு அண்மையில் வந்திருந்தால் நாம் அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி எம் குறைகளை முறையிட்டுக் கோதில் நெறியறிந்து உய்தி பெறுதல் சுலபம்.

இந்த வகையில் எங்கள் பாரம்பரியத்தில் சிவஞானபோதம் எட் டாம் சூத்திரத்தின் விளக்கம் எட்டாம் திருமுறையான திருவாசகம். ஐம்பொறிகளாய வேடரிடம் அகப்பட்ட ஆன்மாவை இறைவன் குரு வடிவாக எழுந்தருளி மீட்டு ஆட்கொள்வதே அது. அத்தகைய திரு வாசகத்தை எதற்கெடுத்தாலும் ஓதி ஓதி உள்ளம் உருகித் தம்மை அடைந்தவர்களையும் உருகவைத்த எங்கள் திருவாசக சுவாமிகள் ஈழத்துச் சித்தர் பரம்பரையில் சிவயோக சிவாமிகளால் உருவாக்கப் பெற்ற செம்மையாளராவர். திருவாசக சுவாமிகளின் நோக்காலும் உரையாலும் பரிசத்தாலும் உய்தியடைந்தவர்கள் பலர். சுவாமிக ளின் திருவுருவம் எல்லோருடைய இதயத்திலும் நின்று நடம் புரிகின் றது. அவர் எல்லோரிடமும் நிறைந்துள்ளார். இவர் அவரே. அவர் சிவபெருமான்.

**க. சீ. குலரத்தினம்**

# புது அனுபவம்

நெடுநாளாக ஒரு சிவனடியாரைக் காண வேண்டும் என்ற விருப்பம். அந்த விருப்பத்திற்கும் ஒரு காரணம் உண்டு. வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்த பெரியோர்கள், தாங்கள் அடியார்களைக் கண்டதையும் அவர்களோடு பேசியதையும் அவர்கள் செய்த சித்துக் களையும் வாய் இனிக்கச் சொல்லச் சொல்லக் கேட்டிருந்தேன். அதனால் அவர்களிடத்தில் இயல்பான ஒரு விருப்பம். யாருடைய உதவியுடனாவது ஒரு சிவனடியாரைப் பார்த்துவிட வேண்டும் என்ற எண்ணம் வளர்ந்துகொண்டே வந்தது. காணுகின்ற சந்தர்ப்பமும் நீண்டு கொண்டே இருந்தது.

கொஞ்ச நாட்கள் செல்ல அந்த விருப்பம் நிறைவேறாததால் பேசாமல் விட்டுவிட்டேன்.

சிந்தித்துப் பார்த்தபோது ஏன் ஒரு சிவனடியாரைப் பார்ப்ப தற்கு ஆசைப்பட்டேன்? என்று என்னையே வினவினேன்?

சிவனடியாரிடத்தில் ஆசீர்வாதம் வாங்கவா? சிவனடியாரு டைய தொடர்பால் என்னையும் பெருமைப்படுத்திக் கொள்ளவா? பீடைகளை நீக்கிக் கொள்ளவா? ஏதாவது நல்வாக்குக் கேட்கவா?

அப்படி ஒன்றும் இல்லை சுவாமியோடு பேசத்தெரிந்தவர், சுவாமி சொல்வதை விளங்கக் கூடியவர், சுவாமியை அருந்துணை யாக அறிந்து நடமாடக் கூடியவர் சுவாமியை அல்லல் தீர்க்கும் அருமருந்தாக அறியத்தக்கவர் வாழும் காலத்தில் வாழ்ந்துகொண்டி ருப்பது பெரும் புண்ணியம் அல்லவா?

அவ்வளவு தான்

கொஞ்சக் காலம் செல்லச் சபாரத்தினச் சாமியார் பற்றிக் கேள்விப்பட்டேன். திருக்கேதீஸ்வரத்தில் நெடுங்காலம் இருந்தவர். திருவாசகத்திற்கு ஆழமான கருத்துச் சொல்லுவார் என்று மேலும் அவரைப்பற்றி அன்பர்கள் சொன்னார்கள்.

இன்னும் கொஞ்ச நாட்கள் செல்ல ஒருநாள் ஒரு பெரியவ ரைக் காணக்கிடைத்தது. அவருடைய தோற்றம் மனதிற் கொஞ் சம் விரும்பத்தக்கதாக இருந்தது.

நெற்றி நிறைய விபூதிப் பூச்சு. கழுத்தில் உருத்திராக்க மணி மாலை. நரைத்த தலைமுடி. நீரோட்டம் போன்ற மெல்லிய தோற் றம். காவி ஆடை. கொஞ்சம் கூனல் விழுந்த முதுகு, களை பொருந்திய முகம்— சைவவேடப் பொலிவு.

"சுவாமி..." என்றேன்

ஒரு கனையான சிரிப்பு

"இரு பிள்ளாய்" என்றார்

கொஞ்ச நேரம் அருகில் இருந்தேன்.

பின்னர் எழுந்து வந்துவிட்டேன்.

கொஞ்ச நாட்கள் சென்ற பின்பு ஒரு அன்பரோடு கதைத்துக் கொண்டிருந்தபோது ''அவர்தான் சபாரத்தினம் சுவாமி'' என்ருர்; அத்தோடு,

''அன்பர் பணிசெய்ய (என்னை) ஆளாக்கிவிட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே'' என்ற தாயுமானவர் பாடலுக்கு

''அன்பர் எனக்கு பணிசெய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே.'' என்று சபாரத்தினம் சாமியார் நுட்பமாக வெளிப்படுத்திய கருத்தையும் விளக்கிக் காட்டினுர். கேட்கச் சுவையாகத்தான் இருக்கிறது.

இன்னும் கொஞ்சக் காலத்திற்குப் பிறகு திருக்கேதீஸ்வரம் சென்றிருந்தேன்.

மத்தியான வேளை கௌரியம்பாள் வாசல் வெளிவீதியில் அமர்ந்திருந்தேன் நல்ல வெய்யில். மேலே வேப்பமர நிழலின் குளுமை. கீழே கருங்கற்றூண்கள். ஒரு கல்லின் மேலாக இருக்கிறேன்.

முன்பின் பழக்கமில்லாத ஒருவர் வந்து கேட்கிருர்.

''சுவாமியைப் பார்த்தீங்களா?

''ஆர் சுவாமி...?'' நான் ஆலோசித்துக் கொண்டிருக்கிறேன்

''சபாரத்தினம் சுவாமிதாங்க நீங்க பார்க்கலையா ? முன்னே தான் இருக்காங்க'' என்று வந்தவரே தொடர்ந்து சொல்லுகிருர். ''முன்னேதான் இருக்காங்க...'' என்று சபாரத்தினம் சுவாமியார் இருக்கும் மடத்தைச் சுட்டிக் காட்டுகிருர்.

''...படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல், திடமாவுறைகின்ற திருக்கேதீச்சரப் பெருமானுடைய திருவருள்போலும் என்று மனத்தில் எண்ணிக்கொண்டு சபாரத்தினச் சாமியின் மடத்திற்குச் செல்லுகிறேன்.

நிழல் தரும் ஆலமரம் நிற்கும் வாசலைத் தாண்டி மடத்தினுள் நுழைகிறேன். உள்ளே ஒரு கட்டிலில் சைவப்பழமாக வீபூதிப் பூச்சோடு படுத்திருந்திருக்கிருர் சாமியார். நானும் சென்று வணங்கிவிட்டு அருகாக அமர்ந்து கொண்டேன்.

திருக்கேதீச்சரத்திற்கு வந்தது பற்றி எல்லாம் விசாரித்துக் கொள்கிருர் சாமியார். இடையிடையே எச்சில் படிகத்திலும் உமிழ்ந்து கொள்கிருர்.

''திருக்கேதீச்சரத் தேவாரத்தைப்படி...'' என்ருர்

நான் பாட ஆரம்பிக்கிறேன்

''விருது குன்றமா மேருவி ஞணர வாவன லெரியம்பாற்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி யெந்நாளும்
கருதுகின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே...''

எனக்கு இராகமும் வராது. பண்ணும் போகாது. ஆனால் எழுத்துப்பிழை இல்லாமல் படித்தேன்.

"மற்றதையும் படிபிள்ளை"

அதையும் படித்தேன்

"அடுத்ததையும் படி பிள்ளாய்"

அதையும் படித்தேன்

அப்படியே பதினொன்றும் படித்துப் பதிகம் நிறைவாகிறது.

"பொருள் தெரியுமோ?"

"தெரியும்"

"சொல்லடா பிள்ளை..."

விறுவிறு என்று சொல்லத் தொடங்குகிறேன். விருதுகுன்ற— திரிபுரத்திலுள்ளோர் பெற்றிருந்த வெற்றி கெட — மாமேருவில் — மகாமேருவை வில்லாகவும்...என்ற கருத்துப் போய்க்கொண்டிருக்கிறது.

சுவாமியார் தடுத்து நிறுத்துகிறார்

"பொறடா பிள்ளாய்... உதெல்லாம் சுவாமியைப் பற்றிச் சொல்லுகிறாய்"

"ஓம்"

"நீ தேவாரத்தைப் படிக்கிறாய், சுவாமியைப் படிச்சால் அதிலை உனக்கு என்ன பயன் ?"

"மெய்யேடா, பிள்ளாய் தேவாரம் படிச்சால் உனக்குப் பயன் பட வேணும். விருது குன்ற மாமேருவில்லா .. எல்லாவற்றையும் உனக்குள்ளை பார்.

"அப்ப சாமி சொல்லுங்கோ..."

"நான் சொன்னால் உனக்குப் பிரயோசனமில்லை .. நீயா உணர்ந்து பார்"

"ஒன்றை என்றாலும் சொல்லுங்கோ"

"எடபிள்ளை - விருது குன்ற உன்ரை ஆணவ வெற்றி அடங்க சுவாமி சொல்லத் தொடங்குகிறார் .." நான் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

புதிய அனுபவம்

நல்ல சிந்தனை

தன்னையும் சுவாமியையும் இணைத்துப் பார்க்கும் ஒரு பொருத்தம்.

கேட்கக் கேட்கச் சுவையாக இருந்தது.

சபாரத்தினச் சுவாமியோடு பழகும் அனுபவத்தைவிட அவரோடு உரையாடியது ஒரு நல்ல புது அநுபவமாக இருந்தது மன அமைதியோடு சாமியாரை வணங்கிவிட்டு அவர் தந்த கேதீச்சரப் பெருமான் மருந்தை இரு கைகளினாலும் வாங்கி நெற்றியில் அணிந்து கொண்டு விடைபெற்றுச் சென்றேன்.

மாடெ லாமண முரசெனக் கடலின தொலிகவர் மாதோட்டத்து தேவி தன்னொடுந் திருந்துகேதீச்சரத் திருந்தவெம் பெருமான்திருவடி நெஞ்சில் இடமாய் உறைவதாக.

சிவநெறிச்செல்வர் சிவசண்முகவடிவேல்

# தவயோகி சபாரத்தினம் சுவாமிகள்

"சித்தம் சிவமாக்கி செய்தனவே தவமாக்கும்
அத்தன் கருணையினல் தோணேக்கம் ஆடாமோ"

என்னும் திருவாசக அடிகளின் கருத்துக்கமைய இறைவனின் இன்னருளைப் பெற்று, சித்தம் சிவமாக்கி செய்தனவே தவமாக்கிய சான்றோர் சபாரத்தினம் சுவாமிகள் என்றும் அடியார்களின் உள்ளங்களில் ஒளிர்ந்துகொண்டே இருப்பார்.

சுவாமிகள் இளைஞராயிருந்தபோது கண்ட இரு கனவுகள் அன்னாரது வாழ்க்கையின் திருப்பு முனையாக அமைந்து ஆன்மீக உணர்வையும் உள்ளொளியையும் பெற்றிடும் அரிய வாய்ப்பினைத் தந்தன. ஒரு கனவில் குருநாதன் தோன்றி

'ஒருவனே போற்றி யொப்பிலப்பனே போற்றி வானேர்
குருவனே போற்றி யெங்கள் கோமளக் கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம்போற்றி தமியனேன் தனிமை தீர்த்தே''

என்னும் திருவாசகப் பாடலை ஓதி, உணர்த்தி மீண்டும் அப்பாடலை ஓதுமாறு பணிக்கப்பட்டபோது, குருவின் அருளால் முன்பு திருவாசகத்தையே அறியாதிருந்த இளைஞர் சபாரத்தினம் பிழை ஏதுமின்றி ஓதினர். நித்திரை கலைந்து விழித்தபோது கனவில் ஓதப்பெற்ற திருவாசகப் பாடலின் நான்கு அடிகளையும் நினைவு கூரக்கூடியதாக விருந்தது. பின்பு வேறெரு அடியார் திருவாசகத்தை ஓதியபோது அதனைச் செவிமடுத்த இளைஞர் சபாரத்தினம் அந்த அடியார் அருகில் சென்று திருவாசகப் புத்தகத்தைப் பெற்றுப் படித்தார். முன்பு கனவில் குருநாதன் சொல்லிக் கொடுத்த அதே பாடல் திருவாசகப் புத்தகத்தில் இருப்பதைக் கண்டு அதிசயப்பட்டார். உப்புப் பொம்மை போன்ற இளைஞர் சபாரத்தினம் திருவாசகக் கடலில் மூழ்கிக் கரைந்து போனர். அவர்வேறு, திருவாசகம் வேறு என்ற பேத இருள் மறைந்து திருவாசக சுவாமிகள் என ஒளிர்ந்தார். உள்ளொளி கண்டு உள நலம் பெருக திருக்கேதீஸ்வரத்தில் திருவாசகமடம் அமைத்தார்.

மற்றக்கனவில் உணவுப் பொருட்கள் அடங்கிய மூடைகள் அடுக்கப்பட்டிருந்தன. அங்கே, "அருட்பெருஞ்சோதி தனிப்பெருங் கருணை" என்ற தாரகமந்திரத்தை வழங்கி ஆன்மநேய ஒருமைப் பாட்டை வளர்த்த வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் தோன்றி, அந்த உணவுப் பொருட்களைச் சமைத்து அடியார்க்கு வழங்குமாறு அன்புக் கட்டளையிட்ட பின்பு மறைந்தார். வள்ளலா

ரின் கட்டளையைச் சிரமேற்கொண்டு திருக்கேதீஸ்வரத்தில் மடம் அமைத்து அடியார்களின் பசிப்பிணி போக்கும் அரும்பணி ஆற்றினார்.

கனவுகளா? நம்பமுடியவில்லையே என ஐயுறுவோர், "உன்னையே நீ அறிவாய்" என உலகுக்கு உபதேசித்த கிரேக்க நாட்டுத் தத்துவஞானி சோக்கிரடீஸ் மரண தண்டனை பெற்று சிறை வாசத்திலிருந்த போது அவர் கண்ட கனவில் கிடைத்த கட்டளைக் கிணங்கவே தாம் கவிதைகள் இயற்றியதாக தமது நண்பர் ஒருவரிடம் கூறினார் என பிளாட்டோ எழுதிய சோக்கிரடீஸ் பற்றிய கதை கூறுகிறது என்பதை நினைவு கூர்தல் நன்று.

"பக்கத் திருப்பவர் துன்பம்—தனைப்
பார்க்கப் பொறுதவன் புண்ணிய மூர்த்தி
ஒக்கத் திருந்தி உலகோர்—நலம்
உற்றிடும் வண்ணம் உழைப்பவன் யோகி"

என்னும் மகாகவி பாரதியாரின் பாடலிற் கூறப்பட்டது போல யோகியாகத் திகழ்ந்த சபாரத்தினம் சுவாமிகள் அடியார்களின் உடற்பசி போக்க உணவை ஈந்து, உள்ளொளி கண்டு உவகை பெற, இறைவனின் திருவருள் துணைகொண்டு, திருவாசகப்பாடல்கள் அனைத்தையும், அனைவர்க்கும் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் உணர்த்தினார். இடையறாது இரந்து, இரந்து உருகி இறைவனை ஏத்திப் போற்றிப் புகழ்ந்து பாடி அடியார் நடுவுள் இருந்தார்; என்றும் இருப்பார்.

"வினைப்பிறவி யென்கின்ற வேதனையி லகப்பட்டுத்
தனைச்சிறிது நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை
எனைப்பெரிது மாட்கொண்டென் பிறப்பறுத்த இணையிலியை
அனைத்துலகும் தொழுந்தில்லை அம்பலத்தே கண்டேனே"

வாழ்க தவயோகி திருவாசக சுவாமிகள் திருநாமம்!

"கரவைகிழார்"

# குருதேவரின் வாழ்வில்...

* திருக்கேதீஸ்வரத்தில் ஒருவர் திருவாசகம் என்னும் பொருள் பற்றிச் சொற்பெருக்காற்றிக் கொண்டிருந்தார். (உயிருண்ணிப் பத்தில் ஐந்தாம் பாடல்) "பற்றுங்கவை யற்றீர்" இப்பாடலைப் பற்றிய கட்டமொன்று வந்தது. நற்றுங்கதியடைவோமெனிற் கெடுவீரோடி வம்மின் என்றபோது ஓடிப்போனார் சுவாமிகள்.

* திருவாசக மடத்தில் பண்சுமந்த பாடல்களை பாடிக்கொண்டிருந்தார்கள் இசைவல்லுனர்கள். அச்சோப்பதிகம் பாடினபோது யார்பெறுவாரச்சோவே என்றபோது - வாசலில் நின்றவர் நான் பெற வந்திருக்கிறேன் என்றார்.

* அன்று சிவராத்திரி நாள் மாலைவேளைக்கு முன்னர், பலர் சுவாமிகள் வாழ்ந்த குடிசையிற் கூடியிருந்தனர். முன்புறமிருந்த கன்மாப் பலகையிற் சுவாமிகளின் திருவாசக விளக்கங்களைக் கேட்டுக்கொண்டிருந்தனர். சங்கீத பூசணம் பேரம்பலமவர்கள் வெகு பவ்வியமாய் உள்ளே சென்று உட்கார்ந்தார் அவ்வளவுதான் படியென்ற ஆணை பிறந்தது. அவர் செத்திலாப்பத்தில் மாயனே 'போதுசேரயன்' என்னும் பாசுரங்களைப் பாடினார். சுவாமிகள் எழுந்து ஆனந்தக் கூத்தாடி அன்பரைக் கட்டித்தழுவி விபூதியாலவரை அபிஷேகித்தார்.

* தேனருவி சிவஞானம் அவர்கள் சுவாமிகளின் மருங்கேயிருந்து திருவாசகத்தை வாயினிக்க செவியினிக்க நெஞ்சினிக்கப் பாடிக்கொண்டிருக்கிறார்கள். சுவாமிகள் உன்னையொருமுறை கட்டித் தழுவலாமோ வென்றிருக்கிறதே யென்று சொன்ன காட்சியை எவர்தான் மறக்கமுடியும்.

* கடந்த ஆண்டு துர்க்கையம்பாள் கோயிலில் இருக்கும்போது ஒருவர் நினைவு மலர் ஒன்றைக் கொடுத்து - எப்படி இருக்கிறதெனப் பெருமையோடு வினவினார். பிரித்துப் பார்த்தவர் முற்றும் பிழையாய் அடித்திருக்கிறதெனக் கூறி சிவபுராணத்தின் முதலடியிலேயே பிழை மலிந்திருக்கிறது வாஅழ்க என்றிருக்க வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்டினார். அன்பரும் தற்பெருமையிழந்து பக்கத்தில் நின்ற மூதறிஞர் பண்டிதர் கந்தையாவை உசாவி சந்தேகம் தீர்த்தார். எழுத்தெண்ணிப் படித்தவர் திருவாசக சுவாமிகள் என்பதை இது காட்டுகிறது.

* திருக்கேதீஸ்வரத்தில் நீண்ட காலம் கமக்காரராய் வாழ்ந்து அடியார்களை ஆதரித்த இவரைப்பற்றி சேர். கந்தையா வைத்தியநாதன் பண்டிதர் கந்தையாவுக்குச் சொல்லும்போது இவர் ஒரு கர்ம வீரர். வயலில் உழப்போனுல்கூட தொடர்ந்து களைப்பும் களைப்புயின்றி உழுது — காடுதிருத்தி நெற்கழனி கண்டவர் என்று கூறினர். சுவாமிகள் திருவாசகத்தையும் படிக்கும் முறையுமதுவே. இறுதிவரை திருவாசகத்தையே தாரகமாகக் கொண்டார். அருச்சனை வயலுள் அன்பு வித்திட்டுத் தொண்டர் உழவர் ஆரத் தந்த அண்டத்தரும் பெறன்மேகன் வாழ்க.

* மைம்மல் நேரம் எட்டியபின் ஒருசோடி எருத்து மாடுகளுடன் போகிறார். ரோட்டைக் கடக்க எத்தனிக்கும்போது மாடுகள் வெருண்டன. பார்த்தார் எதிரேயோர் பெரிய ஆனை. சூழலோ காடு. நேரே கண்ணோடு கண்ணென்றப்பார்த்தார், நீயும் நானும் ஒன்றுதானே யென்ற எண்ணத்தோடு. யானை வந்த பாதை வழியே திரும்பிப்போன காட்சி அவர் நெஞ்சைவிட்டு அகலவே இல்லை.

# சுவாமிகளின் தூயசிந்தனைகள்

* ஆசையைக் கொண்டு ஆடித்திரிவது விதி. மதிகொண்டு விதியேட்டைக் கிழிக்கலாம். அதற்குமதி பெறவேண்டு. மதித்துத் தொழுவோர் யாரோ அவர் விதிக்கு விலக்காவர். எனவேதான் இறைவனும் மதிசூடியிருக்கிறன் நாமவனை மதிப்போம். அப்போ விதிபோம். ''தாமேதமக்குச் சுற்றமும் விதிவகையும்''

* இறைவனுடைய வடிவமே இயங்குமுயிரத்தனையும். எடுத்த உடலம் விடுமுன்னே கரணங்களெல்லாம் பதிகரணமாகப் பெற்று மனக்கண்ணில் தோன்றுவன எல்லாம் பதியின் வடிவமாகவே கண்டு பார்க்குமிடமெங்கணும் நீக்கமற நிறைகின் பரிபூரணனந்த பரவசப்பட்டு நிற்கும் நிலையே எமது எடுகோள்.

* சொல்லாமற் சொல்லி கேளாமற் கேட்பதே மெய். தேவருண்மை சிந்தியாது என்சிந்தை. திருவார் பெருந்துறை மேயபிரான் என் பிறவிக் கருவேரறுத்தபின் யாவரையும் கண்டதில்லை.

* அகக்கும்பிடுதலிலே அருள், புறக்கும்பிடுதலில் இல்லை சிந்தனையைத் திருந்த வைத்தால் அருளமுதம் ஆரப் பருகி அருந்துவீர்.

* இந்தநேரம் நிட்சயம் இம்மையே சிக்கெனப்பிடி உலகில் விளையாட்டை விடுமின், பூவார் கழற்கே புக விடுமின்.

* அனுபோக வாயிலாக இறைவனைக்காண வேணும். இடையீடின்றி இருக்கவழி குலாப்பத்தைப் படித்தல் அதன்படி நடந்தால் இடையீடுபடாது.

* தாய்குழந்தையை முன்னே விட்டுக் கூட்டிச் செல்வாள், அபாயம் வராமல் இருக்க. பெற்ற இளங்கன்றைப் பிரியாமல் சுற்றும் பசுப் போல் இறைவன் திகழ்கிறன்.

* முருகன் சுடர்–திருமால் சக்கரப் சோதிவட்டம். சிவன் சூழொளி.

* ''என்னை நீ கூவிக்கொண்டருள்''–வாழாப்பத்து கூவினல் விடியும்.

* திருச்சாழல் பாடல் 15 கடகரி ஆணவம், பரிமா கன்மம், தேர் மாயை, இடபம்–திருமால் உடம்பு– இடபம். இறைவனிருப்பிடம்.

* அயனும் திருமாலும் ஆண்டவனின் முதல் வழியடியார்.

* ஞானநாடகம் அடியாரோடு இருக்கும் போது பிறக்கும்.

* தூய்மனத் தொண்டருள்ளம் இறைவனிருப்பிடம் மெய்யன்பு ஒன்றுபட்ட அன்பு. பொய்யன்பு இரண்டுபட்டது.

* வாக்கினூற் பேசுவது வீண் பொழுது போக்கு. நினைப்புமதி; பேசுவது விதி. தேவாரம் விதி. திருவாசகம் மதி கொண்டு தொழுதல்.

* திடமான அன்பு, கோளமையான அன்பு நீங்கி நீதான் ஒருவனென்ற அன்பு. அதுதான் தீர்ந்த அன்பு சதகம் 69

* மாணிக்க வாசகர் இறைவனை அடைவதில் இறுக்கமும் உறுதியும் பூண்டிருந்தார். நமக்குமதுவே வழி.

* ஒருமாணவன் பத்து வகுப்புப் படித்து பாஸ்பண்ணி பின் பதினோராம் வருடம் படித்து பன்னிரண்டாம் ஆண்டு பரீட்சையிற் சித்திபெற்றால் மேற்படிப்புக்கான பரிசு பெறுகிறான். அதேபோல திருவாசகத்திலும் சதகம் பத்து வகுப்பு. நீத்தல் விண்ணப்பம் பதினோராம் வகுப்பு. பன்னிரண்டாம் வகுப்பிலவனுக்கு பரிசு கிடைக்கிறது. அதுவே திருவெம்பாவை. படிப்புக்குத்தக்க பட்டத்தை ஒவ்வொருவரும் பெறலாம் (பரிசேலோரெம்பாவை)

* திருவாசகமொன்றுதான் பிறப்பறுக்கும். திருவாசகம் படிப்பது பிறப்பறுக்கவேதான். நமக்குத் தேவை முத்திக்கலப்பு. இதற்கு முந்துவோம். எதற்கு முத்திப்பரிசுக்கு.

* பூவிலே ஜீவ ஜெந்துக்கள் வந்து தேனை உண்பதற்குமுன் எடுத்து இறைவனுக்கு அர்ச்சிக்க வேண்டும். இதுவே உண்பதன் முன் மலர்பறித்துண்ணோராகி லென்றதன் பொருள்.

* ஜெகமெலாம் திருவாயமைய வேண்டும். தித்திக்கும் சிவபதமே திரு. திரு நின்ற செம்மையே செம்மை எல்லாம் சிவமயமாய்க் காட்டுவது திருவாசகம்.

* நம்பிக்கை வேண்டும். வாகுதிரை, போகுதிரை யென்ற கதை இதற்கு உதாரணம்.

* பெரியவனெப்போதும் அரை உடையுடன் வாழ்வான். சிறியவனெப்போதும் முழுஉடையுடன் வாழ்வான்.

* ஏர்தரும் ஏழுல கேத்த எவ்வுருவுந்தன்னுருவாய் இருப்பவன் இறைவன். கொல்லான்புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிருந்தொழும் இதன் பொருளை மாணிக்கவாசகருடைய வாக்குடன் இணைத்துப் பார்ப்போம். எல்லாவற்றிலுமவனே நிறைந்திருப்பதால்; கைகூப்பி எல்லா உயிரும் தொழுகின்றன.

* பிறிவறியா அன்பர்- இறைவனை விட்டும் பிரியாதவர் (அடைக் கலப்பத்து) தன்னிலே உள்ள இறைவனைத் தமக்குளே கண்ட வர். பிரிந்திருப்போர் காணமுடியாது. பக்குவ நிர்ணயத்தில் அடைக்கலப்பத்து வரும்.

* மற்றவர்கள் கேட்பதற்காக மட்டும் திருவாசகம் படிக்கக் கூடாது. கருத்தை மதியால் உணர்தல் வேண்டும். வாயார படித்ததை உள்ளத்தில் உணர்வதுதான் தியானம். வாயாற் படிப்பது விதி. உள்ளத்தால் உணர்வதுமதி.

௫

* திருவாசகத்தில் சுத்தி, (ஆத்மசுத்தி, அனுபோகசுத்தி, நுபஞ்சசுத்தி அருட்சுத்தி, திரோதானசுத்தி) ஆனந்தம், (ஆனந்தத்தழுந்கல், ஆனந்தபரவசம், ஆனந்தாதீதம், ஆனந்தக்களிப்பு, ஆனந்தமனோ லயம், ஆனந்தமுறுதல்), இலக்கணம், (முத்திஇலக்கணம், அத்துவித இலக்கணம்), ஆத்துமபூரணம், ஆத்துமவிரக்கம், குருதரிசனம், நிருத்ததரிசனம் என்றெல்லாம் வருகின்ற அமைப்மை ஒவ்வொரு வரும் கூர்ந்து சிந்திக்க வேண்டும்.

* தையலார் என்னும் சுழிப்பட்டு (மையலாய் இந்த ....என்பதன் பொருள் என்ன. மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் ஐந் தும் நம்மனதைத்தைக்கின்றன. எனவே பெண்களல்லதையலர். ஐம்புலன்வழி நாம் தடுமாறக் கூடாது.

# சபாரத்தினம் சுவாமிகள் சொல்லித் தந்த பாடங்கள்

விநாயகப் பெருமானை நாம் நமது நெற்றிப் புருவ நடுவில் நிறுத்தி உளங்கனிந்து அகமுகமாகவும் வழிபடுதல் வேண்டும்.

ஒருநாள் அடியேன் நல்லூர்க் கந்தன் தேரடியில் அடியார் நடுவுள் இருந்து சேர்ந்து பழ அடியாருடன் கூடிப் பாடிக்கொண்டிருந்தேன். அப்பொழுது அன்பர் ஒருவர்வந்து "உங்கள் வீட்டில் சபாரத்தினம் சுவாமிகள் வந்திருக்கிறார்" என்று அறிவித்தார்.

உடனே ஓடிச்சென்று கற்கண்டுப் பிரசாதம் வைத்து வழிபட்டேன். "நீ பிள்ளையாருக்குப் புத்தகம் அடிக்கிறியாம், பிள்ளையாரைப் பற்றிய பாட்டொண்டுபடி" என்று கட்டளையிட்டார். சுப்பிரமணிய பாரதியார் அருளிய "விநாயகர் நான்மணி மாலை" யினைத் தனிப்புத்தகமாக அச்சிட்டு அடியேன் வழங்கியதைத் தான் சுவாமிகள் குறிப்பிட்டார்கள். ஆனால் அதில் ஒரு பாடலேனும் மனப்பாடம் இல்லை. வழமையாகப் "பிடியதன் உரு உமை கொள ...." என்று தொடங்கும் தேவாரம் தான் வாயில் வரும். ஏதோ–

விநாயகனே வெவ்வினையை வேர்அறுக்க வல்லான்<br>
விநாயகனே வேட்கை தணிவிப்பான்–விநாயகனே<br>
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்<br>
கண்ணிற் பணிமின் கனிந்து.

என்பதை உணர்ந்து படித்தேன்.

"சரி படித்து விட்டாய், "கண்ணிற் பணிமின்" என்றால் என்ன கருத்து? என்று உறுமிக் கேட்டார். எனக்குப் பொருள் சொல்லத் தெரியவில்லை. "அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே"

பின்பு சுவாமிகள் கனிவான குரலில்–

"தம்பி! கண்களை மூடித் தியானம் செய். அப்போது உண்மையான கண்திறக்கும். அது நெற்றிப் புருவமத்தியில் உள்ளது. நாம் சந்தனம், குங்குமம் சாத்தும் இடத்தில் உள்ளது. அதற்காகத்தான் பொட்டுப் போட்டுக் காட்டுகிறது. அந்த இடத்தில் விநாயகப் பெருமானின் உருவத்தை நினைத்து, உருவெழுதி உற்று நோக்கிக், கனிந்து உருகிப் பணிந்து வர ஒரு குறையும் இல்லை. "கண்ணின் பணிமின் கனிந்து"—இப்ப கருத்து விளங்குதோ" என்று நிறைவு செய்தார்கள்.

உடன் இருந்தவர்கள் எனது மனைவி கோகிலாம்பாள், இறைவன் அடி எய்திவிட்ட எனது அருமைத் தங்கச்சி நித்தியலட்சுமி, எனது மனைவியின் இரு தம்பிமார் நல்லைநாதன், ஜெகநாதன் ஆகியோர்.

நாம் ஐவரும் இந்தப் பாடங்கேட்க என்ன புண்ணியம் செய்தோம்.

யாம் பெற்ற செல்வம் பெறுக இவ்வையகம்.

**வே. ந. சிவராஜா**<br>
பதிவாளர்<br>
யாழ். பல்கலைக்கழகம்.

# சிதம்பரத்தைக் கண்டேன்

உலகத்தில் மனிதர்களில் நாம் தரிசித்துக் கொள்பவர்கள் மிகக் குறைவு. அடுத்து நாம் காண்பவர்கள் மிகக் குறைவு. காணுதவர்கள் மிக அதிகம்: என்பதனை அறியக்கூடியதாய் உள்ளது.

உலகிற் குழந்தை பிறந்து வளர்ந்து வரும் காலங்களில் பெற்ருேர் தங்கள் பிள்ளைகளைப் பற்றி ஆயிரம் நினைவுகளை, கனவுகளை வளர்க்கின்ருர்கள். ஆனுல் அவர்களின் நினைவுகளுக்கெல்லாம் பிள்ளைகள் ஆகிவிடுவது மிகக் குறைவு. இந்த வேளையில் பெற்ருேரின் நினைவுகளுக்கெதிராகப் பிள்ளை துறவியாகி விடுவதும் உண்டு. இதை எந்தப் பெற்ருேரும் விரும்பியதாக அறியவில்லை.

இப்படியான மனிதர்கள் நிறைந்த இச்சூழ் நிலையில், காலங்களில் நாம் ஓர் ஞானியை, துறவியைக் காண்பதும் அவருடன் நெருங்கிப் பழகுவதும் அவரின் ஆசீர்வாதம் கிடைப்பதும் பெரும் வரப்பிரசாதம் என்றே கூறலாம். இப்படியான ஞானிகளிடம் இருந்து தீட்சை, ஆசீர்வாதம் மூன்று வகையாக மற்றையவர்களுக்குக் கிடைக்கிறது. அவற்றில் முதலாவதாக, தீட்சையானது ஞானிகளை நாம் தரிசிக்கும் போது அவர்களின் தூய பார்வையானது எம்மீது விழும்போது கிடைக்கிறது. இது எவ்வாறெனில் இயற்கையில் கடலில் மீன்கள் சினைகளை இட்டபின்பு தனது கண்களால் நோக்கும் போது குஞ்சுகள் அங்கே பொரிக்கும். இரண்டாவதாக ஞானிகள் தமது கைகளால் எம்மை ஸ்பரிசித்து ஆசீர்வதிக்கும் போது அஃதாவது பறவைகள் முட்டையிட்டு இறக்கையின் தடவுதலால் அடைகாத்துக் குஞ்சு பொரிப்பது போன்றதாகும்

இறுதியாக ஞானிகளுடன் நாம் பழகி வரும் காலத்தில் அவர்களின் சிந்தையில் எமது நினைப்புத் தோன்றுமாயின் கிடைக்கின்றது இஃது எவ்வாறெனின் கடலின் ஆமை கடலை விட்டு வெளியே வெகு தூரத்திற்கு அப்பால் போய்க் குழிதோண்டி முட்டைகளை ஆயிரக் கணக்கில் இட்டு விட்டுப் பிற்பாடு கடலுக்குள் வந்து தனது சிந்தையில் நினைப்பதால் குஞ்சுகள் பொரிக்கின்றன. இவ்வகையான தீட்சையே மிகவும் சிறந்ததாகும்.

சந்தன மரக்காட்டில் இருக்கும் மற்றைய சாதாரண மரங்களும் சந்தன மரமாகி விடுவது போல நாமும் இப்படியான ஞானிகளுடன் பழகி வரும்போது நாமும் ஓர் உன்னத நிலைக்கு வர முடியும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

எண்ணத்தின் பிரதிபலிப்பே வாழ்க்கையாகும். மனிதன் பிறந்து வளர்ந்து வரும் குடும்பத்தின் சூழ்நிலையாலும் சுற்ருடலாலும் அவர்களின் மனே நிலையாலுமே மனிதன் ஞானியாகிருன். மனம் என்று ஒன்று கிடையாது இந்த மனிதனே மனதை உண்டாக்குகிருன். அதற்கு அடிப்படைக் காரணம் ஆசையும் பேராசையும் தான் ஆகும். இவ்வாருனவர்கள் நாம் ஆத்மா என்பதை மறந்து தேகம் எண்றெண்ணி மனம் போனபடி விசாரணை ஏதுமின்றி வாழ்வதால் துன்பங்களையும் இன்பங்களையும் அனுபவிக்க வேண்டியுள்ளது.

ஆனால் ஞானிகள் நான் தேகம் அல்ல நான் ஆன்மா அது அழிவற்றது தேகத்தின் விவகார வேலை எல்லாம் சாட்சி மாத்திரமே எனப் புரிந்து கொள்கிறார்கள்.

நான் கண்டு தரிசித்த ஞானிகளுள் ஒருவர் பெருமான் சபாரெட்ணம் சுவாமிகள் ஆவார். இவரை திருக்கேதீஸ்வரத்தில் சந்திக்கும் ஓர் பெரும் வாய்ப்பை உருவாக்கியவரும் ஓர் ஆற்றைக் கடப்பதற்குப் பாலம் எப்படியோ அப்படியாக சுவாமிகளின் சந்திப்பிற்கு பெரும் பாலமாக நின்று உதவியவர் ஊரெழு மேன்மை தங்கிய பரம்மாஸ்டராகும்.

ஓர் சமயம் திருக்கேதீஸ்வரம் என்னைக் கூட்டிச் சென்றார் அங்கே இரண்டு, மூன்றுநாட்கள் சுவாமிகளின் ஆச்சிரமத்திற் தங்குவதற்குச் சிறந்ததொரு வாய்ப்புக் கிடைத்தது. அப்படியான வேளையில் எனக்கு மனதில் சுவாமிகளின் பாதங்களுக்கு மலர்கள் வைத்து நமஸ்கரிக்க வேண்டும் எனத் தோன்றிற்று. உடனேயே மலர்களைப் பறித்து எதிரிற் கொண்டு சென்றேன். ஆனாற் பலர் ஆச்சிரமத்திற்கு வந்திருந்து சுவாமிகளிடம் ஆசீர்வாதம் வாங்கிய வண்ணமிருந்தனர். நான் எனது நினைவின்படி செய்ய இறைவனை வேண்டிக் காத்திருந்தேன். ஆனால் திடீரெனச் சுவாமிகள் எழுந்து தனது அறைக்குச் சென்றார். நானும் அவ்விடம் சென்றேன். நான் அவரிடம் சென்று எனது இருகைகளாலும் மலர்களைச் சுவாமிகளின் பாதங்களுக்குச் சமர்ப்பித்து சாஸ்டாங்கமாக நமஸ்காரம் செய்தேன். அவ்வேளை நாத ஒலி கேட்டது. அத்துடன் நாதத்தை விடச்சிறப்பாகக் கணீரென சுவாமிகளின் ஒலியும் ''என்னெடா சிதம்பரத்தை கண்டாயா'' எனக்கேட்டது.

நான் எழுந்து கைகூப்பியபடி நின்றேன். பின்னர் கூறினார் ''சிதம்பரத்தில் பூசை நிகழும் நேரத்தில் மகனே நீயும் பாதபூசை செய்தாயடா'' என்றார். அவர் கண்டு சொன்னார். ஆனால் அப்போதிருந்த பக்குவம் என் அறிவுக்கு அப்பாற்பட்டுள்ளதான மகிமைகள் என்பதனை மட்டும் அறியக் கூடியதாக இருந்தது. ஞானிகளை பற்றி நாம் வெகு சுலபமாக அறிந்து கொள்ள முடியாது. ஒவ்வொரு ஞானியும் ஒவ்வொரு விதமான நடை, உடை, பாவனையுள்ளவர்களாக உலாவுவார்கள். அவ்வகையில் சுவாமிகள், அவர்களின் சுபாபம் கண்டு அவர்களுக்கு ஏற்ப அற்புதங்களை அருள் புரிந்தார்.

உலகத்தில் உள்ள ஜீவராசிகள் அனைத்தும் தோன்றி மறைதல் சுபாபம். அதில் நிலைத்து நீடித்து மூன்று காலத்திலும் குறைவு நிறைவு இல்லாதபடி, உள்ளன உள்ளபடியே உள்ளது ஆன்மாவாகும். அதை அறிவினால் உணர்ந்தவர்கள் ஞானிகள். அவ்வகையான வர்களைத் தரிசிப்பது எம்மை யாம் அறிந்து அதன்படியாக வருவதற்கு ஏதுவாகும்.

ஆத்மா ஆசீர்

**ந. இராசரத்தினம்**
பேபி ஃபோட்டோ

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

இந்நூலின்
பிரதிகள் பெற விரும்புவோர்
கீழ்க்கண்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**த. துரைராசா**
**43A, விதானையார் வீதி,**
**சுண்டிக்குளி**
**யாழ்ப்பாணம்.**

*ஸ்ரீ லக்ஷ்மி அச்சகம், 37 கண்டிவீதி யாழ்ப்பாணம்.*
தொலைபேசி: *23336*